விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 4 ஷவ்வா 9 இதழ் 127

யாழ்ப்பாணம் புதன்கிழமை 18-6-1986

## வசாவிளான் முகாம் பகுதியில் —

# 93 குடும்பங்கள் அகதிகள் 23 வீடுகள் தீக்கிரை!

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளதைத் தொடர்ந்து 93 குடும்பங்கள் தங்கள் சொந்த வீடு வாசல்களை விட்டு அகதிகளாக வெளியேறியுள்ளனர். மேலும் 23 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அகதிகளாக வெளியேறி பாதிக்கப்பட்டவர்கள் யாழ். செயலகத்துக்கு நேற்றுச் சென்று அரசாங்க அதிகாரிகளிடம் தங்களுக்கேற்பட்டுள்ள அவல நிலைபற்றி முறையிட்டார்கள்.

தாங்கள் இதுவரை காலமும் செய்து வந்த விவசாயம், மற்றும் கைத்தொழில்களைத் தொடர்ந்து செய்ய முடியாத நிலையிலிருப்பதாகவும் ஒரு நேர உணவுக்குக்கூடக் கஷ்டப்படுவதாகவும் தெரிவித்த இந்த அகதிகள், தகுந்த நிவாரண உதவிகளைப் பெற்றுத்தரு

(6ம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்னை:

# இந்தியாவின் தீர்வு முயற்சிக்கு பிரிட்டன் தொடர்ந்து உதவும்!

OF JAFFNA RECEIVED PERIODICALS DIVISION LIBRARY

## பிரி. பாராளுமன்றில் உறுதி!!

லண்டன், ஜூன் 17

**"இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணப்படும் வகையில் இந்தியா மேற்கொண்டுவரும் சகல சமரசமுயற்சிகளுக்கும் பிரிட்டன் தனது முழு ஆதரவினையும் தொடர்ந்து வழங்கும்" என்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் மக்கள் சபையில், பாராளுமன்ற விவகார துணை அமைச்சர் திரு. சீம்எக்கர் வலியுறுத்திக் கூறினர்.**

இலங்கை இனப்பிச்னை தொடர்பாக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி எடுத்துவரும் சமாதான முயற்சிகளுக்கு பிரிட்டன் ஆதரவளிக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி தொழில்கட்சி உறுப்பினர் திரு. றெபேர்ட் வாறென்ஹெற்றே மக்கள் சபையில் நேற்று முன்தினம் உரையாற்றினர்.

இந்த உரைக்குப் பதிலளித்துப் பேசியபோதே பாராளுமன்ற விவகார துணை அமைச்சர் திரு. சீம் எக்கர் இலங்கை விவகாரத்தில் இந்தியாவுக்கு பிரிட்டன் உதவும் என்றுர்.

திரு சீம் எக்கர் தொடர்ந்து கூறியதாவது; "இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக அமைதி முறையில் தீர்வு காண முற்படும் எந்த ஒரு முயற்சியையும்

(6ம் பக்கம் பார்க்க)

## வசாவிளான் முகாம் அருகே உருக்குலைந்த சடலங்கள்?

[யாழ்ப்பாணம்]

வசாவிளான் பகாவித்தியாலய இராணுவ முகாமுக்கு அண்மையில் உருக்குலைந்தநிலையில் மனித சடலங்களின் சில பாகங்கள் கிடப்பதாகவும் சில சைக்கிள்களும் அவற்றுக்கருகாமையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வசாவிளான் மகாவித்தியாலயத்தில் இராணுவமுகாம் அமைக்கப்பட்டது தெரியாமல் முகாமுக்கு அண்மையிலுள்ள வீதிகளால் பிரயாணம் செய்தவர்களே இக் கதிக்காளாகியிருக்களாம் என நம்பப்படுகிறது. [மா]

## சிகரெட் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் சிகரட்டுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

யாழ்ப்பாணத்தில் "பிறிஸ்ரல்" சிகரட் ஒன்று 1 ரூபா 15 சதம் வரை விற்பனை செய்யப்படுகிறது. (வா)

## குருநகர் மீனவருக்கு —

## ஸ்ரீதுர்க்காதேவி ஆலயம் நிவாரண நிதி உதவி

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவில் பலியான அப்பாவி மீனவர் குடும்பங்களுக்கு உதவும் வகையில் ரூபா இரண்டாயிரம் நிதியை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் வழங்க முடிவு செய்துள்ளது.

பலியான மீனவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கடந்த செவ்வாயன்று மேற்படி தேவஸ்தானத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்ச்சியிலேயே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெருந்திரளானேர் மத்தியில் உரையாற்றிய துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, "கருணை, மனிதாபிமானம் கொண்ட எம் மக்கள் அனைவரும், இக் கோரச்சம்பவத்தில் பலியாகி உயிர் நீத்த அப்பாவி மக்களுக்கு தம்மால் இயன்ற அனைத்து உதவிகளை செய்ய முன் வர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். (பி)

## முரசுமோட்டை மக்கள் இடம்பெயர்வு

(நெடுந்தீவு)

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்கள் முரசுமோட்டை பகுதியையே பெரிதும் பாதிப்பதால் இப் பகுதிமக்கள் தமது இல்லங்களைவிட்டு வெளியேறிய வண்ணம் உள்ளனர்.

## "குண்டு வீச்சின்போது —

# வாய்க்கால்களில் பதுங்கி படுத்து உயிர் தப்பினேம்!"

## இரு சகோதரிகளின் அனுபவம்

(கே. வி. கே. திருலோகமூர்த்தி)

கிளிநொச்சியில் இடம்பெற்ற ஆகாயக்குண்டு வீச்சு ஷெல் தாக்குதல் முதலான சம்பவங்களை அடுத்து பாதுகாப்பு புகலிடம் ஒன்றில் தஞ்சமடைந்து ஐந்து தினங்கள் உடுத்த உடையுடன் உண்ண உணவுமின்றி உயிருக்காக போராடிய கிளிநொச்சி கனகபுரத்தைச் சேர்ந்த இரு சகோதரிகளான ஆர். யசோதா (19 வயது), ஆர். கடம்பேஸ்வரி (16 வயது) ஆகியோரை ஈழநாட்டிற்காக குஞ்சுப்பரந்தன் என்னும் கிராமத்தில் வைத்து சந்தித்தபோது அந்த இருவரும் அதிர்ச்சியில் இருந்து விடுபடாத நிலையில் இருந்தனர்.

தொடர்ந்து சிறிது நேரத்தில் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்ட அச்சகோதரிகள் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை விவரித்தனர்.

"நாங்கள் இருந்த கனகபுரம் வீட்டில் எங்களுடன் சேர்த்து சுமார் 40 பேர் தங்கி இருந்தனர். தாழப்பறந்த பொம்பர் விமானங்கள் சோடி சோடியாக குண்டு மாரி பொழிந்தன. இராணுவ முகாமிலிருந்து தொடர்ச்சியாக ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

(6ம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் புதியயோசனை: இவ்வாரம் ராஜீவிடம்

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்னையைத்தீர்ப்பதற்காக இலங்கை அரசினுல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய யோசனைகளை இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் திரு. பேர்னுட் திலகரத்தின இவ்வார இறுதிக்குள் இந்தியப் பிரதமர் ராஜீவிடம் சமர்ப்பிப்பார்.

இலங்கை அரசின் இப்புதிய ஆலோசனைகளுடன் திரு. திலகரத்தின நேற்று புதுடில்லி வந்து சேர்ந்தார். (செ)

## கன்னியாஸ்திரிகள் மடம்மீது 'ஷெல்' வெடி தாக்குதல்

(புலோலி)

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட மோட்டார் ஷெல் தாக்குதல்களினுல் பருத்தித்துறை புனிததோமையார் கன்னியாஸ்திரிகள் மடம் சேதப்படுத்தப்பட்டுள்ளது. கட்டிடத்திற்குள் இருந்த மூன்று கன்னியாஸ்திரிகளும் இரண்டு இளம் பெண்களும் மயிரிழையில் உயிர்தப்பினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து மோட்டார் ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றன. அப்போது பல இடங்களில் குண்டுகள் விழுந்து வெடித்தன. பருத்தித்துறை முனையிலுள்ள பருத்தித்துறை புனித தோமையார் கன்னியாஸ்திரிகள் மடத்தின் மேல் விழுந்து

[6ம் பக்கம் பார்க்க]

## மருத்துவ பீடங்களுக்கு இவ்வாண்டு 480 மாணவர்!

[கொழும்பு]

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் நான்கு வளாகங்களின் மருத்துவபீடங்களுக்கும் இவ்வாண்டு 480 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள்.

கொழும்பு வளாகத்தில் 160 மாணவர்களும் ஏனைய மூன்று வளாகங்களில் நூற்றுக்கும் அதிகமான மாணவர்களும்

[6-ம் பக்கம் பார்க்க]

## படகுச்சேவை மீண்டும் சீர்குலைவு

[நெடுந்தீவு]

நெடுந்தீவு — குறிகட்டுவான் படகுச் சேவை மீண்டும் சீர்குலைய ஆரம்பித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையே இதற்கு முக்கிய காரணம் என்று தெரியவருகின்றது. எரிபொருள் தட்டுப்பாட்டால் மேற்படி படகுசேவை மீண்டும் வாரத்திற்கு மூன்று தடவையே நடைபெறும் என்று அறியப்படுகின்றது.

இச்சேவைத் தடங்கலால் பிரயாணிகள் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரி விளம்பரம்

## பயிற்சி

றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங், ComputerProgramming, எலக் ரிக்கல் வயரிங், றிவைன்டிங் பயிற்சிகள் கூடியநேர செய் முறைப்பயிற்சிகளுடன் பயிற்சி யளிக்கப்படும். சனி, ஞாயிறு கிழமை நாட்கள் காலே. மாலே நேர பயிற்சிவகுப்புக்கள் நடை பெறுகின்றன. மீண்டும் பயிற் சிகள் ஆரம்பம்: 20-06-86. விப ரங்கட்கு: Jaffna Technical Institute, 52/1, ஸ்ரான்லி வீதி, [றெயில் வே கடவை அரு காமை], யாழ்ப்பாணம்.
C-2901

ரேடியோ, டெலிவிஷன் றிப்பியறிங் பயிற்சிகள் செய் முறைப்பயிற்சியுடன் கற்பிக்க கப்படுகின்றன, விபரங்கட்கு: எலக்ரோனிக் ரெயினிங் சென் ரர், வி. நித்தியானந்தன், கல்வளே, சண்டிலிப்பாய்.
[C 2927]

## விற்பனைக்கு

கோழிஎரு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அண்ணுபாம், இணுவில். (A 845)

கோழிஎரு விற்பனைக்குண்டு. தொடர்பு: சீமாட்டி. No 122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (C 2914)

எமது சைவப்பிரகாச அச்சு யந்திரசாலைக் கட்டிடத்தில் இருந்து அகற்றப்பட்ட கதவு, யன்னல், ஓடு, தகரம், மரம் ஆகியனவும், அச்சககேஸ், தள பாடங்கள் விற்பனைக்குண்டு. வண்ணார்பண்ணை கல்லூரிவீதி யில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் வேலை நாட்களில் காலை 9-00—12-00 மணிவரை இவற்றைப் பார் வையிடலாம். தங்கள் விலை மதிப்பீட்டை எழுத்துமூலம் செயலாளர், சைவபரிபாலன சபை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரி யில் வழங்குக. C-841

Honda C 90 Reconditioned ரூ 7, 500/-, தட்டச்சு இயந் திரம் புதியது portable ஆங் கிலம் ரூ 2,500/-, தட்டச்சு இயந்திரம் ஆங்கிலம் ரூ 1000/- 3—6 மணிவரை ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக் கோட்டை. [C 2925]

அராலி தெற்கு அம்மன் கோவிலடியில் அமைந்துள்ள ''இலுவானே'' என்னும் 17½ பரப்புக்காணி சுற்றுமதிலு டன் விற்பனைக்குண்டு. நா. தனபாலசிங்கம், 123/1 கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
[C 2923]

### நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
### கேள்வி கோரல்
### 24 ஸ்ரீ 9364 இசுசு லொறி என்ஜின் திருத்தி அமைத்தல்

மேற்படி லொறியின் என் ஜினே பூரணமாக திருத்தி அமைப்பதற்கு பதிவு செய்த கராஜ் உரிமையாளர்களிட மிருந்து கேள்வி கோரப் படுகின்றது. முழு விபரங் களுக்கும் 2-7-86க்கு முன் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**பொதுமுகாமையாளர்,**
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.
தொ. பேசி: 23646.
(A 847)


## தேவை

யாழ். நகரில் உத்தரவு பெற்ற மதுபான விற்பனை ஸ்தாபனமொன்றுக்கு அனுப வமுள்ள மனேஜர்/விற்பனை யாளர் தேவை. 21-6-86 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2924 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(C 2924)

அனுபவம் மிக்க அச்சுக் கோப்பாளர்கள் தேவை, நேரில் வரவும். பகுதி நேர மாகப் பணிபுரிய விரும்புபவர் களும் நேரில்வரவும். செட்டி யார் அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
[A 848)

சகலவிதமான கடிகாரங் கள், மேசை மணிக்கூடுகள் திருத்துபவர்கள் உடன் தேவை. வயது 35 - 40 உட் பட்டவர்கள் விரும்பத்தக்கது. உடன் விண்ணப்பிக்கவும். உதயா வாச்வேக்ஸ், திருநெல் வேலி சந்தி, திருநெல்வேலி.
(C 2929]

### நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**இ. அம்பிகைபாகன்**
[உரிமையாளர் ரஜனி ரான்ஸ்போட் சேவிஸ்]

தோற்றம்: 20-01-1950
மறைவு: 07-05-1986

அன்புடன் எங்கள் குடும் பத்துடன் ஒளி விளக் காய் இருந்து எம்மை வாழவைத்த தெய்வமே மின்னுமல் முழங்காமல் சொல்லொணு துயரத் தில் எம்மை ஆழ்த்தி விட்டு மறைந்தீரே. உமது ஆத்மா சாந்திய டைய பிரார்த்திக்கின் றோம்.

7-5-86 கொழும்பில் அகால மரணமான எனது கணவரின் ஈமக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் மற் றும் கொழும்பில் சகல விதமான உதவி புரிந்து மலர்வளையம் சாத்தி யோருக்கும், அனுதாப மடல் அனுப்பியோருக் கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக் கும் நன்றிகூறி 20-6-86 வெள்ளிக்கிழமை அன்னு ரின் இல்லத்தில் நடை பெறும் அந்தியேட்டி வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கி றோம்.

பிரிவாற் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்
சகோதரர்கள்.
சுன்னுகம் மேற்கு,
சுன்னுகம். C 2940

## வகுப்புகள்

யாழ். வளாக விஞ்ஞான பீட மருத்துவபீட மாணவர் கள் ஆங்கிலத்தில் பேச, எழுத பயிற்சி வகுப்புகள் 18ம் திகதி ஆரம்பமாகின்றன. ஆசிரியர் S. B Iyar. இடம்: வளாக நுழைவாயில் முன்பாக உள்ள குமாரசாமி வீதியில் 40ம் இலக்க வீடு. நேரம்: மாலை 5 மணி தொடக்கம் 6 மணி ரவரை. (C 2911)

ஆங்கில வாசிப்பு பயிற்சி வகுப்புகள் 9ம் தரம் தொடக் கம் 12ம் தரம் வரையுள்ள பாடசாலைப் புத்தகங்கள் வாசித்து விளக்கங்கள். மூன்று மாதக்கட்டணம் - ஒருவருடப் பயிற்சி விபரத்திற்கு தொடர்பு கொள்ளவும். S. B. Iyar, இல 12, வைமன் வீதி, நல்லூர். (C 2909)

புதிய இருமணித்தியால வார இறுதி SPoken English வகுப்புக்கள் வருகிற 21ம் திகதி காலை 11-30 மணிக்கு ஆரம்பமாகின்றன. ஆசிரியர் S B. Iyar 12 வைமன் வீதி, நல்லூர். [C 2910]

## வாடகைக்கு

வீடுகள். அறைகள் [பாது காப்பான இடங்களில்] தேவையானவர்கள், கொடுக் விரும்புகிறவர்கள் தொடர்பு கொள்க, T. R. என்ரபிறை சஸ் அன் மல்ரிசேவிசஸ், கட் டைப் பிராய், யாழ்ப்பாணம். [கிளை - குப்பிளான்]
(C 2916]

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனம் எழுதாத சுதுமலைதெற்கைச்சேர்ந்த கணேயவிற்பாதசம்பந்தன் கைம்பெண் மகேஸ்வரி யின் சொத்துக்கள் பொருட்கள் விடயமாக.
( -மரணமெய்தியவர்.)

சுதுமலை தெற்கைச் சேர்ந் தவரும் தற்பொழுது செங்கலடியிலிருக்கும் மட் டக்களப்பு பல்கலைக்கழ கத்தில் பணிபுரிந்துவரும் வன்னியசிங்கம் கணேய விற்பாத சம்பந்தன் தயா கரன்.
-மனுதார்

சொத்துரிமை நியாயாதிக்கம் } இல. 3959/ T தத்துவம்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனம் எழு தப்படாத சொத்துரிமைத் தத்துவ வழக்கு மேலே குறிப் பிடப்பட்ட இறந்து போனவ ரின் ஆதனங்கள் சொத்துக்கள் ஆகியவற்றை நிருவகிப் பதற்காக மேற்படி நீதிமன் றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ள தென இத்தால் அறிவிக்கப் படுகிறது.

அக்கறையுள்ள எவ ரேனும் 1986-ம் ஆண்டு ஆடி மாதம் 11-ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத் தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலா காது என்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றூர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
**கு. குலசிங்கம்,**
பதிவாளர்.

1986-ம் ஆண்டு வைகாசி மாதம் 27-ந் திகதி.

வரைந்தவர்:
**நா. முத்துவிநாயகம்,**
மனுதாரின்
சட்டத்தரணி,
(C2917)

### ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**கார்த்திகேசுபிள்ளை தாமோதரம்பிள்ளை**

தோற்றம்: 15-04-1904
மறைவு: 26-06-1985
திதி: 18-06-1986

உங்கள் ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கின் றோம்.

அன்பு மனைவி, மகன்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.
நண்பர்கள்.
இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
(C 2825)

### காணவில்லை



**நல்லையா கிருபாகரன்**

கட்டுவனைச் சேர்ந்த நல்லையா கிருபாகரன் என்பவரை 11-06-86 தொடக்கம் காணவில்லை. இவரின் பெற்றோர்கள் மனமுடைந்திருக்கிறார் கள். இவரைக் கண்டவர் கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தொடர்பு கொண்டால் சன்மானம் வழங்கப்படும்.

K. நல்லையா,
மல்லாகம் வீதி,
கட்டுவன்,
தெல்லிப்பழை.
(C 2936)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## Wanted Labour Contractor

Wanted for a large Water Supply Project in Mannar, an experienced Labour Contractor. The sites are at Murunkan, Adampan, Vankali and Mannar. The duration of work will be for about an year. Main jobs will be laying of pipes, excavation of earth, building etc. All material, machinery and equipment will be provided by the firm. Work will be supervised by our Engineers. For further details please contact our Area Manager at our Jaffna Branch.

SAMUEL, SONS AND CO. LTD.,
206, HOSPITAL ROAD, JAFFNA,
(A 735)

## WANTED

1. SITE AGENT- Wanted urgently for a large Water Supply Project in Mannar a Civil Engineer, with 10 years post qualification experience, to be in charge of the project. He should report to the Project Manager, Civil Engineering Department at Head Office in Colombo regarding the progress of work etc.
2. SITE ENGINEER- Civil Engineer with 5 years post qualification experience

Salary for the above two posts are negotiable.

Kindly apply giving full details of past experience to the Area Manager, Samuel, Sons and Co. Ltd., 206, Hospital Road, Jaffna. Telephone: 22462, 24398.

(A 736)

## தொடரும் புதிய வெளியீடுகள்

1. ரகுமான்–சுஜாதா
   'கண்ணே கனியமுதே' (CAMERA COPY)
2. ராஜ்குமார் – ரேவதி
   "தெய்வ மகள்" (CAMERA COPY)
3. S. V. சேகர் – ஜீவிதா
   "சோறு" (CAMERA COPY)
4. சுரேஷ் – ஜீவிதா
   "ஹலோ யார் பேசுகிறது" (THOMSUN MASTER)
5. கவுண்டமணி – இளவரசி
   "தலையாட்டி பொம்மைகள்" (PYRAMID MASTER)

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 [C 2937]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தன்னால் இயன்றதைச் செய்யவேண்டி முயல்பவனும், தன் மனச்சாட்சியின் பிரகாரம் காரியங்களைச் செய்ய முயல்பவனுமே உண்மையான சுதந்திர மனிதனாவான்.

—ரூசோ

## நமது நோக்கு

# தென்னாபிரிக்க மக்களின் விடிவுகாலம்

ஒரு மொழியைப்பேசும் மக்கள் சிறுகூட்டமானாலும் அக்கூட்டத்துக்கு மதிப்பளித்து அவர்களின் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வளர்த்தெடுப்பது நாகரிக உலகப் பண்பாடு.

இந்த முயற்சி சோஷலிஸ நாடுகளில் மட்டுமன்றி முன்னேற்றமடைந்துள்ள மேற்கு நாடுகளிலும் பின்பற்றப்பட்டுவரும் ஒருமரபு.

தென்னாபிரிக்காவில் பதவியிலுள்ள நிறவெறி அரசு பத்து ஆண்டுகளுக்கு முன் 'ஆப்ரிக்கான்ஸ்' மொழியைத் திணிக்க எத்தனித்த பொழுது ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டம் நடத்தி மாண்டுபோனார்கள். மாண்டவர்களில் பெரும்பாலானவர்கள் மாணவர்கள். கல்வியில் வேற்றுமொழியைத் திணிப்பதற்கு அவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துக் கிளர்ந்தெழுந்தார்கள். அன்றைய போராட்டத்தை அடக்கிவிட்டதாகவே நிறவெறி அரசு மனப்பால் குடித்தது. ஆனால் இன்று அதைவிட பன்மடங்கு ஆக்கிரோஷத்துடன் ஆபிரிக்க மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் 'சுவேட்டோ' போராட்ட நினைவு தினம் தென்னாபிரிக்காவில் அனுஷ்டிக்கப்பட்டது. அதையொட்டிய ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தி, கடுமையான செய்தித் தணிக்கையையும் செயல்படுத்தி போராட்டத்தை நசுக்கிவிட வெள்ளையர் ஆட்சி முயற்சி செய்தது. ஆனால் நடந்ததென்ன?

வெள்ளையர் அல்லாதவர்களின் வேலைநிறுத்தம் பூரண வெற்றியளித்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. வேறுசம்பவங்கள் பற்றிய விபரங்கள் தணிக்கை காரணமாக கிடைக்கவில்லை. மேலும் ஆபிரிக்க மக்கள் தமது உரிமைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தக்கூடிய சாத்தியமும் தென்படுகின்றது.

நவீனரக ஆயுதங்கள் பயிற்சிபெற்ற ராணுவங்கள், மற்றும் மேற்கு நாடுகளின் ஆதரவு எல்லாம் இருந்தும்கூட நிறவெறி ஆட்சியாளர் கறுப்பு இனத்தவரின் போராட்ட முனைப்பைக் கண்டு நிலைகுலைந்து போயுள்ளனர்.

இதேசமயம் தென்னாபிரிக்க இனவெறிக்கொள்கையைக் கைவிடச்செய்வது தொடர்பாக ஆராய்வதற்காக ஐ. நா. வின் ஆதரவில் பாரிசில் நடைபெறும் மகாநாட்டில் பல நாடுகள் அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகள், தென்னாபிரிக்காவுக்கு ஆதரவாக இருந்து வருவதாகக் கண்டித்துள்ளன.

தென்னாபிரிக்காமீது கடுமையான பொருளாரத் தடைகளை ஏற்படுத்த வேண்டுமென இந்த நாடுகள் விரும்புகின்றன. ஆனால் பொருளாதாரத் தடைகளினால் கறுப்பு இனத்தவர்களே பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட் தாட்சர் கூறிவருகின்றார்.

தென்னாபிரிக்காவிலிருந்து தங்கள் தொழில்நிலையங்களுக்குத் தேவையான கனிப்பொருள்களையெல்லாம்பெற்றுவரும் இந்நாடுகள் பொருளாதாரத்தடைவிதிப்பை விரும்பாதது ஒருபுறமிருக்க, அங்கு வெள்ளையர் ஆட்சி கவிழ்ந்துவிடும் என்பதில் அச்சமும் கொண்டுள்ளன.

தங்கள் நாட்டில் ஜனநாயகம் சிறப்பாகச் செயற்பட்டாற்போதும்; பிற நாடுகளில் தங்கள் தேவைகளுக்கு ஏற்றாற்போல் ஆட்சிகள் அமைந்திருப்பதையே இந்நாடுகள் விரும்புகின்றன. உலகத்திற்கு ஜனநாயகத்தை (பல கட்சி அரசியல்) முறையை அறிமுகப்படுத்தியது மாத்திரமின்றி அதனை வெற்றிகரமாக உள்நாட்டில் செயற்படுத்தியும் வருவதாகக் கூறப்படும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள், தென்னாபிரிக்காவில் பெரும்பான்மை மக்களான கறுப்பர்கள் ஒதுக்கப்பட்டு சிறுபான்மை வெள்ளையரின் காட்டுமிராண்டித் தர்பார் நடத்துவதற்கு ஆதரவளிப்பதும் ஆட்சி கவிழ்ந்துவிடாமல் முண்டு கொடுப்பதும் சிந்தனையாளர்கள் மத்தியில் சிரிப்பையே ஏற்படுத்துகின்றது

பிரிட்டிஷ் ஆட்சியாளரின் போக்கு பொதுநல அமைப்பையே குலைத்துவிடப் போகின்றது என ஆஸ்திரேலியப் பிரதமர் விடுத்துள்ள எச்சரிக்கையாகுதல் தாட்சர் அம்மையாரின் கண்களைத் திறக்கவேண்டும்.

என்னதான் இராணுவ பலம் பெற்றிருந்தாலும், அடக்குமுறை, கெடுபிடிகளைக் கட்டவிழ்த்துவிட்டாலும், ஒரு பிரதேசத்தின் மக்கள் விரும்பாத வகையில் எந்தவொரு ஆட்சியையும் அவர்கள்மீது திணித்துவிட முடியாது. வியட்னாம், ரொடீஷியா போன்ற நாடுகள் இந்த உண்மையைச் சமீப காலத்தில் நமக்கு நினைவுறுத்தியுள்ளன.

தென்னாபிரிக்காவும், இது போன்று உரிமைக்காகப் போராடும் மக்கள் வதியும் ஏனைய நாடுகளும் எதிர்காலத்தில் இதையே நிரூபிக்கப்போகின்றன.

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

இருபாலை அருள்மிகு கற்பகப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவத் தேர்த்திருவிழா எதிர்வரும் 24 ந் திகதி செவ்வாய் முற்பகல் நடைபெறவுள்ளது.

கடந்த 10 ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்த மகோற்சவம் எதிர்வரும் 25 ந் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவுறும்.

## ● தானுடாவிட்டாலும் சதை ஆடுகிறது!

# ஈழவர் துயர் துடைக்க

# உதவிக் கரம் நீட்டும்

# லண்டன் வாழ் தமிழர்!

**நா. மாணிக்க இடைக்காடர்**

பல முறை லண்டன் செல்லும் பொழுது அவ்விடம் வசிக்கும் எங்கள் மக்களை சந்திக்க ஆவலாயிருந்தேன். ஆனால் ஏதோ சில சிநேகிதரை விட மற்றவர்களைச் சந்திக்க முடியவில்லை. இம்முறை இதற்கொரு வாய்ப்புக் கிடைத்தது. தமிழ்ப் பேசும் மக்களின் சபையினர் [ஸ்கொட்) [Standing Committee of Tamil Speak-ing Peoples] ஆண்டுக்கு மூன்று நான்கு தடவை ஒரு நகர சபை மண்டபத்தில் சந்தித்து மத்தியான போசனஞ் செய்வது வழக்கம். இம்முறை தமிழ் வருஷப்பிறப்பன்று ஒரு விருந்து நடைபெற்றது இதில் நானும் பங்குபற்றினேன் பெரியவர்களுக்கு நாலு பவுணும் சிறுவருக்கு ஒரு பவுணுமென்ற விகிதத்தில் ரிக்கட்விற்றார்கள். செலவைவிட எஞ்சிய பணத்தை தங்கள் பிறந்த பூமிக்கு ஏதாவதொரு நல்ல கருமத்திற்கு அனுப்புவார்கள்.

இந்தவிருந்தில் பலரைச் சந்தித்தேன். ஒருசிலர் 1958ம் ஆண்டுக் கலவரத்துடன் வந்து குடியேறியவர்கள். அநேகம் கடந்தபத்துப் பதினைந்தாண்டுகளுக்குள் வந்தவாகள். வேறு சிலர் 1983ம் ஆண்டுக் கலவரத்தில் எல்லாவற்றையும் இழந்தவர்கள். பலர் செல்வாக்குடன் வாழ்கிறார்கள். ஒருசிலர் பிறந்த பூமிக்கு உதவிசெய்யத் துடிக்கிறார்கள். வேறு சிலர் தாங்கள்மிகவும் கெட்டிக்காரர்கள், இலங்கையிலிருந்து தப்பி வந்துவிட்டோமென்று தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்கிறார்கள், இவர்களில் ஒருவர் என்னை ''நீங்களும் வந்துவிட்டீர்களா?'' என்று கேட்டார். அதற்கு ''அப்படி பிறந்த பூமியை விட்டுவர நான் கோழையல்ல'' எனக் கூறினேன். எப்படியாயிருந்தாலும் அனேகர் தங்களால் இயலக்கூடிய உதவியைச் செய்யத் ஆயத்தமாக இருக்கிறார்கள். 'ஸ்கொட்' ஸ்தாபனம் அரசியலில் சம்பந்தப்படாத இயக்கம். இதனால் பலர் துணிந்து உதவி செய்கிறார்கள். ஏற்கனவே இத்தாபனம் பல இலட்சக்கணக்கான பணத்தை வடக்குக் கிழக்குப் பிரதேசத்திற்கு அனுப்பியிருக்கிறது.

லண்டன் வாழ்வு மிகவும் நெருக்கடியானது. திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரைக்கும் தங்கள் தங்கள் தொழிலில்ஈடுபடுவார்கள். வேலை செய்யுமிடத்திற்கும் வீட்டுக்கும் தூரமாயிருப்பதால் பிரயாணத்தில் ஒரு நாளில் இரண்டு மணி நேரம் போய்விடும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வாரத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள் வாங்குவதிலும், துணிதோய்ப்பதிலும் வீட்டைத் துப்புரவாக்குவதிலும் நேரம்போய்விடும். உதவிக்கு எவரையும் கேட்க முடியாது. வேலையாட்கள் கிடையாது. பற்றுக்குறைக்கு வருடத்தில் ஆறுமாதம் கடுங்குளிர. இலங்கையிலுள்ளவர்கள் லண்டன் ஒரு சுவர்க்கமென்று நினைக்கக் கூடாது இப்படிப்பட்ட நெருக் [illegible] 'ஸ்கொட்' ஸ்தாபனத்தில் கடமையாற்றும் சிலர் தங்கள் வாழ்க்கையில் ஒருபதியை எங்கள் இனத்தின் நன்மைக்காகஅர்ப்பணம் செய்கிறார்கள். இப்படிப்பட்ட தியாகிகளை சந்திக்க எனக்கு இந்தவிருந்தில் ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

இந்தவிருந்தில் ஒருமுக்கிய அம்சம் என்னவென்றால் பிள்ளைகளும் பங்குபற்றுவது. மலேசியா பல்கலைக்கழகத்தில் நான் கடமையாற்றும்பொழுது தனிநாயகம் அடிகளும் கடமையாற்றினார். அடிகள் எப்பொழுதும் விருந்தில் பிள்ளைகள் பங்குபற்றவேண்டுமென்று வற்புறுத்துவார்கள் லண்டன்விருந்தில் அடிகளின் விருப்பத்தை லண்டன்வாழ் தமிழ் பேசும் மக்கள் பூர்த்திசெய்கிறார்களென்று நான் குறிப்பிட்டேன்.

மேலும் 'ஸ்கொட்' ஸ்தாபனத்தைக்கவனிப்போம். இவர்கள் கஷ்டப்பட்டுப் பணம்சேர்க்கிறார்கள். இதை எங்கள் பகுதிகளிலுள்ள பயனுள்ள கருமங்களில் பயன்படுத்த இலங்கையில் ஒரு ஸ்தாபனத்துடன் தொடர்புகொண்டால் வசதியாயிருக்குமென்று கூறுகிறார்கள். இதில் எவ்வளவோ உண்மையிருக்கிறது. இப்பொழுது என்ன நடக்கிறதென்றால் ஒன்றில் அந்த ஸ்தாபனம் தங்களுக்குத் தெரிந்தளவில் ஒருதிட்டத்தை வகுத்துப் பணம்அனுப்புகிறார்கள். அல்லது இந்த ஸ்தாபனத்தைப் பற்றி கேள்விப்பட்டோர் இவர்களை அணுகி பொருள் உதவி கேட்டால் நன்கு ஆராய்ந்து உதவி செய்கிறார்கள் இம்முறை அவ்வளவு திருப்தியாயில்லை. இதனால்தான் இலங்கையில் ஏதாவது ஒரு நல்ல ஸ்தாபனம் இவர்களோடு நிரந்தரமாகத் தொடர்புகொண்டு இவ் ஸ்தாபனத்தின் பிரதிநிதித்துவம் பெற்றால் கூடிய ஆக்கபூர்வ வேலைகள் செய்யக்கூடியதாயிருக்கும்.

இந்த ஸ்தாபனம் சமீப காலத்தில் செய்த சேவையை பற்றியும் பணவுதவியைப் பற்றியும் விசாரித்தேன். அவர்கள் கூறியதை இவ்விடம் குறிப்பிடுகிறேன். இந்த ஸ்தாபனம் 1983 ம் ஆண்டு யூலைக் கலவரத்திற்கு பின்பு சுமார் அரை இலட்சம் பவுண் (அதாவது சுமார் இருபது லட்சம் ரூபா) சேர்த்து தாய் நாட்டிற்கு உதவி புரிந்திருக்கிறது. ஆகக் கூடிய பண உதவி ஒக்ஸ்ஃபாமுக்கு (OXFAM) இலங்கையில் நிவாரணத்திற்கு என அளித்தது அடுத்ததாக யாழ். புனர்வாழ்வு நிதிக்கும் (Refugee Rehabilitation fund, Jaffna, திருமலை கிழக்குபகுதி மனிதபொருளாதார அபிவிருத்திக்கும், யாழ். நிவாரண ஸ்தாபனத்திற்கும் (The Refugees Relief Organisation, Jaffna) கொடுத்தது. மலைநாட்டுத் தொழிலாளிகளின் கல்வி நம்பிக்கை சபைக்கும் உதவியிருக்கிறது. இப்படிப் பலவித உதவி 15 நிலையத்திற்கு அளித்திருக்கிறது.

விருந்தில் அருந்தின உணவைப் பற்றிக் கூறாமல் விட்டால் கலியாணவீட்டில் தாலி கட்டாதது மாதிரியிருக்கும். யாழ்ப்பாணம், வன்னி, திருமலை, மட்டக்களப்பில் ஒரு விருந்தில் என்ன என்ன உணவு பரிமாறுவார்களோ அதே உணவு லண்டனில் கிடைத்தது எங்கள் சம்பிரதாயச் சாதமும், நல்ல கறிகளும், குளம்பும், இரசமும், தயிரும், அப்பளமும்,பாயசமும், வடையும் பரிமாறினார்கள். எல்லாப் பெண்களும் திலகமிட்டு,சேலை கட்டி தமிழ் முறையில் காட்சியளித்தார்கள். அதில் ஒருவர் ஒரு ஆண் பெண் நெற்றி நிறைய வீபூதி அணிந்திருந்ததைப் பார்க்க எனக்கு மகிழ்ச்சி கொடுத்தது. குறைந்தது 500 பேருக்கு உணவு கொடுத்தார்கள். உணவு ருசியிலும், பரிமாறின முறையிலும் எங்கள் பெண்கள் தங்கள் கைவரிசையைக் காட்டினார்கள் எனக்கு இதைப் பார்க்கப் பெருமையாக இருந்தது.

சமீபத்தில் ராஜீவ் காந்தி இந்தியர் வெளிநாடு சென்று குடியேறியிருப்பதால் இந்தியாவுக்கு அவ்வளவு நஷ்டமில்லை ஏனென்றால் இவர்களில் பலர் பல விதத்தால் தாய் நாட்டிற்கு உதவி செய்கிறார்கள் என்று கூறியிருக்கிறார் (ஏற்கனவே ஒரு கட்டுரையில் நான் இதை குறிப்பிட்டதை வாசகர்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன்) ஒரு விதத்தில் இது உண்மை தான். வேறு விதத்தில் இது நஷ்டம் தான். எனினும் இந்தியாவிலிருந்தோ, இலங்கையிலிருந்தோ போகிறவர்கள் போகவே செய்வார்கள். இதை எம்மால் தடுக்க முடியாது. நடந்தது நடந்தாகிவிட்டது. எதிர் காலத்தில் இவர்கள் எங்களுக்கு என்ன செய்யலாம் என்ற கேள்வி எழுகிறது. ஏதோ தங்களால் இயன்ற பொருளுதவிகளையும், தங்கள் தொழிலில் பிறநாடுகளில் கிடைக்கும் அனுபவத்தையும் தாய் நாட்டிற்கு அளிப்பார்களானால் ஓரளவில் எல்லோருக்கும் திருப்தியாயிருக்கும். இதையே நான் விருந்தில் பல நண்பர்களுக்குக் கூறினேன்.

## 'பிலிமை' எடுத்துச் சென்றனர்

(பண்டத்தரிப்பு)

''வயதுவந்தவர்களுக்கு மட்டும்'' என்ற குறிப்போடு பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள மினி தியேட்டர் ஒன்றில் காண்பிக்கப்பட்ட ஆங்கிலத்திரைப் படத்தின் பிலிமை இளைஞர் குழு ஒன்று எடுத்துச்சென்றது. இப்படத்தை போட்டுப் பார்த்து ஆபாசமற்ற படமாக இருந்தால் பிலிமை திருப்பி ஒப்படைப்பதாக இந்த இளைஞர்கள் கூறிவிட்டு பிலிமை எடுத்துச்சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது

## சரத்துக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

''அடக்கப்பட்ட மக்களுக்காக பாராளுமன்றத்தில் ஒலித்து நின்ற ஒரே ஒருகுரல் தோழர் சரத் ஆகும்'' என்று கோண்டாவில்வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் அமரர் சரத்முத்தெட்டுவேகமவின் அஞ்சலி செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

''தோழர் சரத்தின் மறைவு ஈழத்தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, தேசிய, சர்வதேச ரீதியாக அடக்கப்படும் சகல மக்களுக்கும் பேரிழப்பாகும்'' என்றும் அவ்வஞ்சலியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்கர் போராட்டத்தை நசுக்கும் வெள்ளையர் முயற்சி தோல்வி

## வேலை நிறுத்தம் பூரண வெற்றி

பிரிட்டோரியா, ஜூன் 18 சுவேட்டோ கிளர்ச்சியின் பத்தாண்டை நினைவுகூரும் முகமாக ஆபிரிக்க தொழிலாளர் மேற்கொண்ட மிகப் பெரிய வேலைநிறுத்தத்தை தடுத்து நிறுத்துவதில் வெள்ளையர் அரசு தோல்விகண்டது

தென்ஆபிரிக்க அதிகாரிகள் பெருமளவில் ஆபிரிக்கர்கள் வாழும் நகர்ப்புறத்தை முற்றுகையிட்டும் நாட்டுக்குள் ஏற்பட்ட அசம்பாவிதத்தை தடைசெய்தபோதும் இவ் வேலைநிறுத்தம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது

இதுதொடர்பாக நினைவு ஆராதனைகளை நடாத்த அரசு தடைசெய்திருந்தபோதும் ஜோன் எட்பேக்கில் உள்ள அங்கிலிக்கன் தேவஸ்தானத்தில் நோபல் சமாதானப் பரிசைப் பெற்ற பிஷப் டெஸ்மான்ட் டுட்டு ஆராதனை ஒன்றை நடத்தி உரைநிகழ்த்தினார்

அவ்வுரையில் அவர் அரசின் வன்செயல்களையும் நிறவாதத்தினையும் கண்டித்தார். பல இன மக்கள் குழுமியிருந்த இவ் ஆராதனையில் நிறவாதத்தினை ஒழித்துக்கட்டுவதன் மூலமே எல்லா மக்களும் பாதுகாப்பாகவும் அமைதியாகவும் வாழமுடியுமென்றார். கறுப்பினத்தவர்களும் தம்மைப்போல் மனித இனமேயென வெள்ளையர் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் தென்னாபிரிக்க அரசைக் கேட்டுக்கொண்டார்

இந்நிகழ்ச்சிகள் நடைபெற்ற இதேநேரம் சுவேட்டோ நகரில் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதென செய்திகள் தெரிவித்தபோதும் அரசின் தடைஉத்தரவு காரணமாக அவைபற்றி எதுவும் தெரியவில்லை.

இந்நிகழ்ச்சியினை நினைவுகூரும்முகமாக உலகின் ஏனைய பலபகுதிகளிலும் பல ஆராதனைகள் ஏற்பாடாகியுள்ளன. பலநாடுகள் தென்ஆபிரிக்காவிற்கு எதிராக பொருளாதார தடை கொண்டுவரவேண்டுமெனக் கேட்டுள்ளன. [சிவ]

## வல்வைத் தாக்குதல்கள்:

## உடுப்பிட்டி பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு மகஜர்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறையில் கடந்த 10ம் திகதிமுதல் மூன்று நாட்கள் அரசபடைகளினால் நடாத்தப்பட்ட தாக்குதல்களையும், இதன் காரணமாக இப்பகுதியிலும் சுற்றுப்புறங்களிலுமிருந்த அப்பாவி மக்கள் வெகுவாசப் பாதிக்கப்பட்டதையும் கண்டித்து உடுப்பிட்டிப் பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

அந்தமகஜரில் ஒருஜனநாயக நாட்டில் வாழும் மக்களைப் பாதுகாக்கவேண்டிய அரசபடையினர் மிகவும் கண்மூடித்தனமான வகையில் பொதுமக்கள் மீது பலவித நவீனரக ஆயுதங்களைப் பிரயோகித்துத் தாக்குதல்களை நடத்தியமை கண்டனத்துக்குரியது

'இவற்றைமிகவும் மனவருத்தத்துடன் எமது பிரதேச மக்களின் சார்பிலும், ஜனநாயகத்தை விரும்பும் சகல மக்களினதும் சார்பிலும் தங்கள் கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம் முப்படைகளாலும் ஏவப்பட்ட பீரங்கி, ஷெல்' பொம்பர்குண்டுகள் துப்பாக்கி வேட்டுக்களால் பாதிக்கப்பட்ட மக்களின் தொகை ஏராளம்.

''அரசபடைகளினால் மேற்கொள்ளப்பட்ட முப்படைத் தாக்குதல்கள் அப்பாவிப் பொதுமக்கள் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒருபயங்கரமான செயல் எனவும் கருதவேண்டியுள்ளது'' என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## குரும்பசிட்டி

## பொன்பரமானந்தர் மகா வித்தியாலயம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்

குரும்பசிட்டி பொன்பரமானந்தர் மகாவித்தியாலயம் நாளை தொடக்கம் குப்பிளான் விக்னேஸ்வர வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது,

குரும்பசிட்டி பொன்பரமானந்தர் மகாவித்தியாலய அதிபர் திரு த. சிவராசா மேற்படி தகவலை தெரிவித்தார்

புதிதாக இராணுவப் முகாம் போடப்பட்டுள்ளவசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்து சுமார் 300 யார் தொலைவில் குரும்பசிட்டி பொன்பரமானந்தர் மகா வித்தியாலயம் இருக்கின்றது. இதனாலேயே இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்படுகிறது

நாளை தொடக்கம் குப்பிளான் மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 12-30 மணி தொடக்கம் 4-30 வரை வகுப்புகள் நடத்துவதற்கு ஒழுங்குகள் அதிபரினால் செய்யப்பட்டுள்ளன. காலைநேர வகுப்புக்கள் நடாத்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (வா)

## திருட்டு

[யாழ்ப்பாணம்]

பூட்டியிருந்த சேலை அச்சகத் தொழிற்சாலையில் பட்டப்பகலில் திருட்டு நடந்துள்ளது.

இந்துக்கல்லூரி வீதியில் அமைந்துள்ள 'வசந்தா சாறி பிறின்டர்ஸ்' ஸ்தாபனத்திலேயே இத்திருட்டு நடந்துள்ளது

கடந்த ஞாயிறன்று காலையில் காவலாளி வீட்டுக்குச் சென்றிருந்த வேளையில் பூட்டியிருந்த ஸ்தாபனத்தில் இத்திருட்டு நடைபெற்றுள்ளது.

ரொக்கப்பணம் மாத்திரமே களவுபோயிருப்பதாகப் பொறுப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

## கனேடிய நீதிமன்றத்தில் சீக்கிய தீவிரவாதிகள்!

### பல்வேறு சதிகளின் சூத்திரதாரிகளாம்

[கனடா]

பல குற்றச்சாட்டுகளின் பேரில் சிக்கியத் தீவிரவாதிகள் ஆறு பேர் கனடா நீதிமன்றத்தில் குற்றம்சாட்டப்பட்டுள்ளனர்

இந்திய பாராளுமன்றத்தை குண்டுவைத்து தகர்க்கவும், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் குழந்தையை கடத்தி கொலைசெய்யவும், பிரயாணிகள் ரயிலை கவிழ்க்கவும் பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையமொன்றை தகர்க்கவும் இவர்கள் திட்டமிட்டிருந்தனர் என தெரியவந்துள்ளது

இந்திய அரசால் பயங்கரவாதிகள் என கூறப்படும் ''பாபாகலஸ்தா'' என்ற சீக்கிய சமயப்பிரிவிலேயே இவர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

மேலும் இவர்களோடு தொடர்பானவர்களென ஒன்பது சீக்கியர்கள் பஞ்சாப்பிலும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (சிவ)

## "வரலாற்றில் நடைபெறாத கொடூரமான சம்பவம்"

[யாழ்ப்பாணம்]

''மண்டைதீவில் கொலை செய்யப்பட்ட மீனவர்களுக்கு மண்டைதீவு மக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றார்கள். இவர்களின் குடும்பங்களுக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்''.

இவ்வாறு மண்டைதீவு பிரஜைகள் குழு மண்டைதீவில் நடைபெற்ற மீனவர் படுகொலைச் சம்பவங்களைக் கண்டித்து வெளியிட்ட அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும், கூறப்பட்டுள்ளதாவது: ''மண்டைதீவு வரலாற்றில் என்றுமே நடைபெறாத இக் கொடூரசம்பவத்தைச் செய்தவர்கள் மீது அரசு உடன் நடவடிக்கை எடுப்பதோடு இறந்தவர்கள் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும்'' என்றும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## "அணுஏவுகணை உற்பத்தியை குறைக்க ரஷ்யா தயார்!"

### – கொர்பச்சேவ் அறிவிப்பு

மாஸ்கோ, ஜூன் 18

அணுஆயுத ஏவுகணை உற்பத்தியை குறைத்துக்கொள்ள தான் முன் வருவதாக சோவியத்யூனியன் அறிவித்துள்ளது.

சோவியத் அதிபர் திரு. மைகல் கொர்பர்ச்சேவ் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு சமர்ப்பித்த அறிக்கையொன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில், ஆயுதங்களை குறைப்பதில் பரஸ்பர உடன்படிக்கைக்கு வசதியாக சோவியத்யூனியன் புதிய முயற்சிகளை கையாண்டுவருவதாகவும் அதேவேளையில் அமெரிக்காவும் பதினைந்து ஆண்டுகளுக்கு விண்வெளி ஆயுத உற்பத்தியை நிறுத்தவேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுள்ளார். (சிவ)

## தேசிய இளைஞர் சேவை மன்றம் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவுக் கடலில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டவர்களில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் குருநகர் கிளையினரும் சிலர் அடங்குவர்.

இவர்கட்கும் மற்றும் கடலில் பலியான அனைவரது குடும்பங்கட்கும் மல்லாகம் இளைஞர் சேவை மன்றம் ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துள்ளது.


### வீடு/காணி விற்பனவு

1. யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையாக மூன்று அறைகளுடன் ஒரு புதிய வீடு.
2. யாழ்ப்பாணம் கச்சேரி கண்டி வீதிக்கு அண்மையாக 4 பரப்புக்காணி. பிரித்தும் கொடுக்கப்படும்.

வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்துக்கு 20% வட்டி கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:-

J. P. T. Ltd,
3, நவீன சந்தை [மேல் மாடி],
யாழ்ப்பாணம். [A-733]


## "உலகக் கிண்ண" உதைபந்தாட்டம்:

# பிரேஸிலிடம் - போலந்து 4-0 கோலால் தோல்வி

(மெக்ஸிக்கோ)

மெக்ஸிக்கோவில் நடைபெற்றுவரும் 'உலகக் கிண்ண' உதைபந்தாட்டப் போட்டியின் 2-வது சுற்று ஆட்டத்தில் பிரேஸிலும், ஆர்ஜன்ரீனாவும் வெற்றி பெற்று 'கால்இறுதி'யாட்டத்தில்விளையாடத் தகுதி பெற்றுள்ளன.

### பிரேஸில் வெற்றி

பிரேஸிலுக்கும் - போலந்துக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் பிரேஸில் 4—0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் பிரேஸில் கோஷ்டியின் முன்னாள் காப்டன் சோக்ரட்டீயின் ஆட்டம் மிகச்சிறப்பாக இருந்தது.

பிரேஸில் கோஷ்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை, கால்இறுதியாட்டத்தில் பிரான்ஸ் அல்லது இத்தாலியை எதிர்த்து விளையாடும்.

### ஆர்ஜன்ரீனா வெற்றி

ஆர்ஜன்ரீனாவுக்கும் - உருகுவேக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டியில் ஆர்ஜன்ரீனா 1—0 கோலால் வெற்றி பெற்றது.

இப்போட்டி ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை மிகவும் விறுவிறுப்பாகவே இருந்தது. இடைவேளையின் போது இருகோஷ்டிகளும் கோல்கள் ஏதும் போடாத நிலையிலேயே இருந்தார்கள்.

இப்போட்டியில் உருகுவே கோல்கள்போடும் பல சந்தர்ப்பங்களை நழுவ விட்டுவிட்டது குறிப்பிடத்தக்கது. (வீ)


### பிரயாண ஒழுங்குகள்

கனடா ஜேர்மனி
பிரான்ஸ் டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொன்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

பிரான்ஸ், ஜேர்மனி, கனடா

செல்வதற்கு முற்பணம் செலுத்தியவர்கள் இம்மாதம் 25ந் திகதிக்கு முன் தொடர்புகொள்ளவும்.

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். [A 729]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பலன்

மாதம்- ஆனி
திகதி- 4 (18 - 6 - 1986)
கிழமை- புதன்
திதி- ஏகாதசி
மு. இ. வரை
நக்ஷத்திரம்- சுவாதி
பி. இ. வரை

மேடம்: எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும். களஸ்திரவழிப் பொருள் வரவுமுண்டு. உறவு முறைகள் பலப்படும்.

இடபம்: உதவி செய்யப் போய் உபத்திரவத்தை தேடிக்கொள்வீர். வியாபாரத்தில் நஷ்டம் தோன்றும் தொழில் துறையில் தொல்லைகள் அதிகரிக்கும்.

மிதுனம்: பிதாவழிச்செய்தி கிட்டும். தெய்வ நம்பிக்கை மேலோங்கும். நீண்டநாள் மனக்குறை நிவர்த்தியாகும் மேலிடச்சிறப்புமுண்டு.

கடகம்: தேடிய பொருள் காலடியில் கிட்டும். பரோபகாரச்சிந்தை மேலிடும், இதயத்தில் இனிமை துள்ளும்.

சிங்கம்: வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தியேற்படும் பெரியோர் ஆதரவு கிட்டும் எதிர்பார்த்த விடயமொன்று சாதாரமான முடிவைத்தரும்.

கன்னி: எதிர்பார்த்த வகையில் பொருள் விரயமாகும் வியாபாரத்துறையில் பிணக்குசள் தோன்றும் சிந்தையில் குழப்பத்திற்கும் இடமுண்டு,

துலாம்: நினைத்ததில் தடை நிம்மதி பறக்கும், பொருள் தவறக்கூடும். உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

விருச்சிகம்: இதயத்தில் நல்லெண்ணங்கள் தோன்றும் கடந்தகால சம்பவமொன்று முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். வேண்டிய ஒருவரின் உதவியும் உண்டும்

தனுசு: தவறுகள் நடக்கலாம். நிலையும் தடுமாறும் நண்பர்களே காலை வாரிவிடக்கூடும், சிலருக்கு அன்னிய வாசம் அகாலபோசனமும் உண்டு.

மகரம்: மாணவர்களுக்குப் பொன்னுனதினம், எதிர்பாராத வரவுகளுக்கும் இடமுண்டு. பொதுவாக எல்லாத் துறையிலும் அபிவிருத்தி காணப்படும்,

கும்பம்: பெரியோர் ஆதரவுண்டு புத்திரர் மகிழ்ச்சியும் புண்ணிய விருப்பு முண்டாம் நீண்டநாள் பிணி இன்று நிவர்த்தியாகலாம்.

மீனம்: நிலையும் தடுமாறும் நண்பர்களே காலை வாரிவிடக்கூடும், பொறுமையின் நிழல் உங்களைத்தொடரும் நிதானம் அவசியம்.

திருமலை ரவீந்திரன்

---


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெறும் சீட்டு இலக்கங்கள்

ரம்ழான் பெருநாளை முன்னிட்டு அதிர்ஷ்டலாபச் சீட்டு குழுவினரால் 15-6-86 ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணிக்கு ஒஸ்மானியாச் சந்தியில் இழுக்கப்பட்ட பரிசுச்சீட்டு இலக்கங்கள்

1ம் பரிசு 3533,
2ம் பரிசு 3556,
3ம் பரிசு 2598.

மேற் குறிப்பிடப்பட்ட இலக்கங்களையுடைய சீட்டுக்களை நேரடியாகக் கொண்டு வந்து பரிசுகளை ஒஸ்மானியாச் சந்தியில் ஒரு கிழமைக்குள் பெற்றுக் கொள்ளவும்.

— அதிர்ஷ்டலாபக் குழுவினர்.

[C 2934]



## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வி சிவனுஜா

சங்குவேலியைச் சேர்ந்த சிவநாதன்-வசந்தா தம்பதிகளின் செல்வப் புதல்வி சிவனுஜா தனது முதலாவது பிறந்த தினத்தை 18-06-86 இன்று புதன் கிழமை 'சிவநிதி' இல்லத்தில் கொண்டாடுகிறர். (ஜெர்மனி) அப்பா - அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பாட்டி, பப்பா-மம்மா கொழும்புப்பப்பா-மம்மா, ஜெர்மனி பெரிய மாமா-மாமி, சிந்து மச்சாள், நிகேதன் மச்சான், ஜெர்மனி சின்னமாமா-உரும்பிராய் மாமி, சுண்டிக்குளி பெரியப்பா-பெரியம்மா, மதியண்ணு, சுகனியா அக்கா, திருநெல்வேலி மாமா-மாமி, மச்சாள்மார், தயாளன் மச்சான், சங்குவேலி பெரியப்பா - பெரியம்மா, றேகா அக்கா, வருஜி அக்கா, றூஜன் அண்ணு, பவாசித்தி-சித்தப்பா, கிளிநொச்சி மாமா, லண்டன் சுகந்தாசித்தி - சித்தப்பா, தங்கச்சி சுவேதா எல்லோரும் சிவனுஜாவை சீரும் சிறப்புடனும் சகலகலைகளும்கற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறுர்கள்.

[C 2859]


# "சைவாலய கிரியைகள் பற்றிய விளக்கங்கள் ஆங்கிலத்திலும் எழுத வேண்டும்"

[யாழ்ப்பாணம்]

''சைவாலயக் கிரியைகள் பற்றிய விளக்கங்கள் ஆங்கிலத்திலும் எழுதப்படல் வேண்டும். இப்பணியில் தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் ஈடுபட்டுள்ளார். பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் எழுதிய நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணி வெகு விரைவில் நிறைவேற வேண்டும்.''

மேற்கண்டவாறுநேற்றுமுன் தினம்நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற கோப்பாய் சிவம் எழுதிய 'சைவாலயக் கிரியைகள்' பற்றிய நூல் வெளியிட்டு விழாவுக்குத் தலைமைவகித்துப்பேசிய யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. வே. ந. சிவராஜா கூறினர்.

அந்தணச்சிவாச்சாரியார்களின் ஆசியுரைகளுடனும், ஆதீனமுதல்வரது அருளுரைகளுடனும் விழா விமரிசையாக நடந்தது.

நூலாய்வு செய்த யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் தமது விமர்சன உரையில் இன்று கிரியைகளுக்கு பலர் விஞ்ஞான விளக்கம் கேட்கும் போது சமய நெறியாளர் விஞ்ஞானத்தின் எல்லையில் தான் மெஞ்ஞானம் பிறக்கிறதென்ற உண்மையினை எடுத்துக் கூறவேண்டும் என்ருர்,

திரு. க. சி. குலரத்தினம் சிவத்தமிழ்ச் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகியோரும் விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றினுர்கள்.

திரு. க. சி. குலரத்தினம் சொற்பொழி வாற்றுகையில்:

நமது சமய மரபுகளை ஆங்கிலத்தில் சொன்னுல்த்தான் அது ஆராய்ச்சி பூர்வ ான உண்மையென்று சொல்லப்படுகின்றது. அதனுலேயே எல்லா வகையான நமது அடிப்படை உண்மைகளை ஆங்கிலப்படுத்தி நிரூபிக்கவேண்டிய காலகட்டம் வந்துள்ளது' என்ருர்.

'சைவாலயக் கிரியைகள்' என்ற இந்நூலிலே திருமுறைசளுக்கு முக்கிய இடம்கொடுத்திருப்பது பாராட்டுதற்குரியது பிராமணர்கள் திருமுறையை ஒதுக்கும் மனப்போக்கு மாறவேண்டும்அவர்களே திருமுறைகளைப்பாடவேண்டும். ''திருமுறைகளும் கிரியைகளும்'' என்ற இந்நூலிலிடம் பெற்றுள்ள பகுதி போற்றுதற்குரியதொன்று என்று குறிப்பிட்டார். [நா]

## வை.எம்.சி.ஏ.ஆதரவில் புதிய பாலர் பாடசாலை

(அராலி)

அராலி வடக்கில் யாழ்ப்பாணக் கல்லூரி கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தின் ஆதரவில் கடந்த 15-ம் திகதி பாலர் பாடசாலை ஒன்று ஆரம்பித்துவைக்கப்பட்டது.

திரு சு. செபநேசன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. ராஜன் கதிர்காமர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நாடாவை வெட்டி பாடசாலையை ஆரம்பித்துவைத்தார்.

அருட்திரு. அ. ஜெயக்குமாரின் கிறிஸ்தவக் கீதங்களுடன் ஆரம்பமான நிகழ்ச்சிகளின்போது அருட்திரு. மா. தேவதாசன் வரவேற்புரை நிகழ்த்திஞர்.

பிஷப் அதிவந். டி. ஜே. அம்பலவாணர் பாலர் பாடசாலையின் வளர்ச்சிக்காக இறைவனைப் பிரார்த்தித்தார். கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள மங்கள விளக்கேற்றி வைத்தனர். அதிபர் திரு. ராஜன் கதிர்காமர் உரைநிகழ்த்துகையில், கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தின் சேவைகளைப் பாராட்டிஞர். திரு. தா. சத்தியநாதன், திரு. க. ராமதாஸ் ஆகியோர் உரையாற்றினர்.

## மனையியல் கண்காட்சி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதியில் அமைந்திருக்கும் 'எஸ். ஜி. லேடிஸ்' அக்கடமி கண்காட்சி நடைபெற்றது. இக்கண்காட்சியைக் கடந்த சனிக்கிழமை யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் திறந்துவைத்தார். கண்காட்சியில் நூற்றுக்கதிகமான பெண்களின் கைநுட்பத்தில் அமைந்த பூவேலைகள், ஓவியங்கள், சமையல் பண்டங்கள், தையல் வேலைகள் காட்சிப் பொருளாகவுள்ளன. யாழ். கோட்டை, தமிழ் ஈழம் போன்ற அமைப்பையுடைய கேக் வகைகள் பலரையும் வியப்பிலாழ்த்தியுள்ளன. [கெ]

## புனருத்தாரண மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தொண்டமானுறு கெருடாவில் அருள்மிகு காளி அம்மன் கோவில் புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து விசேட அபிஷேகமும் திருவிழாப் பூசைகளும் பத்துத் தினங்களுக்கு நடைபெற்று வருகின்றன.


## யாழ். ஐக்கிய லாபநிதி பற்றுவரவுடையோர் சங்கம்

ஷை சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 22-6-86 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்த ஆதீன மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர் யாவரும் சமுகம்தரவும்.

சி. விஸ்வலிங்கம்,
செயலாளர்

[C 2928]



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க் ★ சவூதி அரேபியா

1. கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு நேரடிப் பிரயாண ஒழுங்குகள் உடன் செய்து கொடுக்கப்படும்.
2. சவூதி அரேபியாவுக்கு (Labourers) தொழிலாளர்களுக்கான பிரயாண ஒழுங்கு உடன் செய்து கொடுக்கப்படும்.
3. செல்ல விரும்புவோர் யூன் 25-ந் திகதிக்கு முன்பாக கீழ்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.
4. எமது பிரயாண முகவர் கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு உங்களை உடன் அழைத்துச் செல்வார்.

தொடர்பு:
N.BALA, திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

பிற் குறிப்பு:- ([illegible]
சந்திக்கு அருகாமை (C2920)



## 90-வது நாள் நினைவஞ்சலி



செல்வி
சேஞதிராசா
பிரேமதரா

அன்னையின் மடியில்:
10-2-1966
அரக்கன் அழிவில்:
21-3-1986

எங்கள் குடும்பத்தில் குலவிளக்காய் வந்துதித்தவளே! அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும், மதிப்புடனும், வாழ்ந்தவளே! உன் வளர்ச்சி கண்டு மனம் மகிழ்ந்த வேளையில் கொடிய அரக்கர்களின் ஷெல்லுக்குப் பலியாகினுய். எமதுள்ளம் படும்பாடு யாருக்குத் தெரியும். உனது உருவமும், உனது செய்கைகளும் எம் மனதைவிட்டு அகலமாட்டா. உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை தினமும் பிரார்த்திக்கின்ருேம்.

உங்கள் நினைவால் வாடும்:
அப்பா, அம்மா,
அக்கா, அண்ணு,
உறவினர்கள்,
நண்பிகள்.
வைரவர் கோவிலடி,
கொட்டடி,
[C2948] யாழ்ப்பாணம்.


## பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் பொருட்காட்சி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. யாழ். கல்விப்பணிப்பாளர்திரு இரா. சுந்தரலிங்கம் பொருட்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

இப்பொருட்காட்சியில்உயிர்வாயு பாவனை, விஞ்ஞானக் காட்சிகள் விசேஷமாக இடம்பெறும். [ஐ]

## கமத்தொழில் திணைக்களத்தில் பதியவேண்டும்

(யாழ்ப்பாணம்)

1980ம் ஆண்டின் 33ஆம் இலக்கப் பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் பிரகாரம், கட்டுப்படுத்தப்பட்ட பீடைக்கொல்லிகளை [பூச்சிநாசினிகள்] விற்பனை செய்யும், களஞ்சியப்படுத்தும் அல்லது விநியோகம் செய்யும் சகலரும் கமத்தொழில் திணைக்களத்தில் தம்மைப் பதிவு செய்துகொள்ளல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் அவ்வாறு பதிவுசெய்யாதவர்கள் உடனடியாக விண்ணப்பித்துத் தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம் என்று அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் திரு. இ. இரகுபதி தெரிவித்துள்ளார்.


லிடோ
காலை 10-30, 2-30, 6-30
கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ் நடித்த
தாயில்லாமல் நானில்லை
(கலர்)

வெலிங்டன்
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த
விதி
(கலர் - புதிய பிரதி)

லிபேட்டி சினிமாவில்
[வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்]
Bygerald seymour நடித்த
Harrys Game
அதி நவீன ஆயுதங்களைக் கொண்டு பயங்கரவாதிகளை அழிக்க முயற்சிக்கும் பயங்கரபோர்நுட்பங்களை கண்டு களியுங்கள்.
(கண்டிப்பாக வயது வந்தோர்க்கு மட்டும்)
10-30, 2-30, 4-30, 6-45
[ஒறிஜினல் பிரதி]
1986 6ம் ஆண்டு வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

புதன்கிழமை 18-6-86

# கொலையுண்ட குருநகர் மீனவர் குடும்பங்களுக்கு நிவாரண நிதி திரட்டும் பணி!

(யாழ்ப்பாணம்)

சில வாரங்களுக்கு முன்னர் மண்டைதீவில் கொலையுண்ட முப்பது மீனவர்களினதுகுடும்பங்களுக்கு உதவும்பொருட்டு நிதி திரட்டும் முயற்சியில் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் ஈடுபட்டுள்ளது.

அகதிகள் புனருத்தாரணச் சங்கத்திஞல் வழங்கப்பட்ட முப்பதாயிரம் ரூபா ஏற்கனவே மேற்படி குடும்பங்கள் மத்தியில் விநியோகிக்கப் பட்டுள்ளதாகவும், அகதிகள்புனர் வாழ்வுக்கழகம் ரூபா 30,000 ஐயும் மனிதவள அபிவிருத்திச் சங்கத்தினர் [செடெக்] ரூபா 15,500 ஐயும், சென்பற்றிக் கல்லூரி பழையமாணவர் சங்கம் ரூபா 15,500ஐயும் மேற்படி நிவாரண நிதிக்கு வழங்கியுள்ளதாகவும் சங்கப் பிரமுகர் ஒருவர் 'ஈழநாடு' க்குத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணநிதி திரட்டும் விஷயத்தில் குழறுபடிகள் நிகழ்வதைத் தவிற்கும் பொருட்டு, இந்நிதிக்கு பங்களிப்புச் செய்யவிரும்பும் சேவைநோக்குள்ள ஸ்தாபனங்களையும் மற்றும் தனிப்பட்ட அனுதாபிகளையும் தம்பங்களிப்பை 'செயலாளர்', கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம். குருநகர்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தாம் வேண்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [ஷ]

## இன்றும் மணையியல் கண்காட்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். விக்ரோறியா வீதியில் இடம்பெற்றுவந்த மணையியல் கண்காட்சி இன்று பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளது. யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் கலந்துகொண்டு உரைநிகழ்த்துவார். [மா]

## கன்னியாஸ்திரி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வெடித்த குண்டிஞல் கட்டிடம்பலத்த சேதத்திற்குள்ளானது. இந்நீண்ட கட்டிடத்தின் ஒருபகுதியில் இருந்த கன்னியாஸ்திரிகளும் இளம் பெண்களும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

அன்றையதினம் பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியே வர முயற்சித்த போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் தாக்குதல்களை மேற்கொண்டமையால் இராணுவத்தினர் முகாமிற்குத்திரும்பி விட்டனர் என்றும் அதனையடுத்தேமோட்டார் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மருத்துவ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அனுமதிக்கப்படவுள்ளனர்.

380 சிங்கள மாணவர்களும் 70க்கும் சற்றுக் கூடுதலான தமிழ் மாணவர்களும், ஏறத்தாள 30 முஸ்லிம் மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப் படவுள்ளனர்.

இது இவ்வாறிருக்க தெரிவு செய்யப்பட்ட தமிழ், முஸ்லிம் மாணவர்கள் பேராதனை, அல்லது கொழும்பு வளாகத்திற்கு அனுமதி தரும்படி கோரியிருப்பதாக பல்கலைக் கழக மான்யக்குழுத் தலைவரும், உயர்கல்வி அமைச்சின் செயலாளருமான பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு யாழ்ப்பாண வளாகத்திற்கு 105 மாணவர்களை அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டிருப்பதால் அத்தீர்மானத்தில் எந்தவிதமான மாற்றத்தையும் ஏற்படுத்தி, பல்கலைக்கழக மாணவர் அனுமதியில் ஏற்றத்தாழ்வுகளை தவிர்ப்பதற்காக இந்த வேண்டுகோளை ஏற்க முடியாது என ஸ்ரான்லி கல்பகே அறிவித்துள்ளார். [வா)

## குண்டுவீச்சின்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பக்கத்து வீட்டில் திடீரென அழுகுரல் சத்தங்கள் கேட்டன. அவ்வீட்டை குண்டு தாக்கி சேதப்படுத்தியிருந்தது. அவ்வீட்டில் இருந்தோர் மயிரிழையில் உயிர்தப்பி எங்கள் வீட்டிற்கு ஓடிவந்தனர்.

தொடர்ர்துவீட்டில்இருப்பது பாதுகாப்பல்ல என்ற முடிவுடன் அம்பாள்குளம் கிராமத்தை நேக்கி உடுத்த உடையுடன் சென்றடைந்தோம். போகும் வழியிலும் குண்டு வீச்சு இடம்பெற்றது. வாய்க்கால் கரைகளில் படுத்தும் பதுங்கியும் உயிர்தப்பிஞேம்.

அம்பாள்குளம் கிராமமும் சனநடமாட்டம் இன்றி வெறிச்சோடிக்கிடந்தது. ஒரு ஓலைக்குடிசையில் நாங்கள் தங்கிஞேம். வரும் வழியில் எங்களுடன் வந்தவர்களில் பலர் வேறு இடங்களுக்கு பிரிந்து சென்றுவிட்டனர்.

அம்பாள்குளத்தைச் சுற்றியும் குண்டுமாரி பொழிந்தது. நாங்கள் பதினைந்துபேர் உணவிற்காக வேறு இடம் செல்ல முடியாது இருதினங்கள் தண்ணீரைக் குடுத்தேசமாளித்தோம். ஒரு தினம் குண்டுத் தாக்குதல் நின்றது. எங்களுடன் இருந்த உறவினர் ஒருவர் எங்கேயோ போய் அரிசியும், தேங்காயும் கொண்டுவந்தார். அவற்றைக் கொண்டு மூன்று தினங்கள் கஞ்சி தயாரித்து அருந்திஞேம்.

குண்டுத்தாக்குதல், ஷெல் தாக்குதல் ஒய்ந்தபாடாக இல்லை. தொடர்ந்து கிளிநொச்சியில் இருக்கமுடியாத நிலை. நடப்பது நடக்கட்டும் என்ற முடிவுடன் நாங்கள் இருசகோதரிகளும் நடந்துகுஞ்சுப் பரந்தன் வந்தோம்.

வரும்போதுதிருநகர்ஊடாக வந்தோம். சில சடலங்களும் வீதி ஓரங்களில் கிடந்தன. அவற்றை சிலர் அப்புறப்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்'' என்றனர்.

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

[யாழ்ப்பாணம்]

யாழ். கல்வித்திணைக்களத்தின் வளர்ந்தோர் கல்விப் பிரிவு, கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையம் தேசிய கூட்டுறவுச்சபை ஆகியன ஒருங்கிணைந்து நடத்தவிருக்கும் பாலர் பாடசாலை ஆசிரியப் பயிற்சி நெறிக்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பயிற்சிநெறி ஒருவருட காலத்திற்கு நடத்தப்படும். விண்ணப்பிக்கும் யுவதிகள் க. பொ. த. [சாதாரணம்] பரீட்சையில் இரண்டு திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்தவர்களாயும் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களாயும் இருத்தல் வேண்டும்.

இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை நேரிலோ அல்லது கடிதமூலமோ ''பொறுப்பதிகாரி, கல்வி மூலவள நிலயம் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி புத்தூர் என்ற முகவரிக்கு இம்மாதம் 30-ம் திகதிக்கு முன் அனுப்பவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## இன்று ஆய்வரங்கு

[யாழ்ப்பாணம்]

''தெற்காசிய சூழலில் இலங்கையின் இனப்பிரச்னை'' என்ற தலைப்பிலான ஆய்வரங்கொன்று இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழககைலாசபதி அரங்கில் பிற்பகல்இரண்டு பணியளவில் நடைபெறும் இவ்வாய்வரங்கினை வணிக, புவியியல் மாணவ மன்றம் ஏற்பாடு செய்துள்ளது. திரு. திருநாவுக்கரசு திரு. பாலச்சந்திரன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

## வசாவிளான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறு வேண்டுகோள் விடுத்தனர்.

இம்முறைப்பாடுகளைக் கேட்டறிந்த யாழ்.செயலக பொதுசனதொடர்பதிகாரி யாழ். அரசாங்க அதிபருக்குத் தெரிவித்து நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். [மா]

## இலங்கை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டன் ஆதரிக்கும். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இந்தியா மிகவும் சிக்கலான நிலைமைக்குள்ளாகியுள்ளது. இந்நிலையில் இந்தியாவுக்கு தன்ஞல் இயன்ற எத்தகைய உதவியையும் வழங்க பிரிட்டன் தயாராகவுள்ளது'' [வா]

## இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் நுண்கலைக் கழக கவின்கலை மன்ற ஆதரவில் இன்று பிற்பகல் ஒருமணிக்கு மேற்படி கழக அரங்கில் நாட்டிய நாடகம் பற்றிய கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் இக்கருத்தரங்கை வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பார்.

## மரண அறிவித்தல்

### எழுவைதீவு திருமதி ஆனந்தராணி சின்னத்தம்பி (Post Mistress)

எழுவை தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நயிஞதீவு அம்பலவாணர் சின்னத்தம்பி (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவி ஆனந்தராணி (Post Mistress) காலமாகிவிட்டார். இவர் வைத்திய கலாநிதி நடேசன், மஞேகரி, மகேசன் (ஜேர்மனி), சபேசன் (ஜேர்மனி), சுந்தரேசன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயானந்தன் (சீமெந்துக் கூட்டுஸ்தாபனம் காங்கேசன்துறை), வைத்திய கலாநிதி சியாமளா ஆகியோரின் அன்பு மாமியுமாவார். நவீன், ஹிசாணி, அஞ்சுமன், ஹர்சன் ஆகியோரின் பேத்தியுமாவார். தகனக்கிரியை புதன் கிழமை (18-06-86) மாலை 3-00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும். உற்ருர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

அ. சின்னத்தம்பி ஆசிரியரும்
மக்கள், மருமக்கள்
[C-2943]

### பெரியதம்பி கந்தையா

[சிவலிங்கப்புளியடி]

வண்ணர்பண்ணை சிவலிங்கப்புளியடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவரான பெரியதம்பி - கந்தையா காலமாஞர். இவர் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை (திருநெல்வேலி) அவர்களின் இளைய சகோதரரும் காலஞ்சென்ற செல்லமுத்து அவர்களின் அன்புக்கணவரும் திரு. பாலசிங்கம் [இளைப்பாறிய முதன்மை ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், கல்வி அமைச்சின் முன்னைநாள் விஞ்ஞான பாடநூல் எழுத்தாளர், உரும்பிராய் இந்துக்கல்லூரி, வெலிகம அரபா ம. ம. வி, யாழ். மத்திய கல்லூரி முன்னைநாள் ஆசிரியர்] திரு குமாரகுலசிங்கம் [நீர்ப்பாசனத் திணைக்களம், முருங்கன்] செல்வி யோகேஸ்வரி (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி) திருமதி இராஜேஸ்வரி சுந்தர நடராஜன் (ஆசிரியை குமரபுரம் இந்து மகாவித்தியாலயம்) திருமதி இரத்தினேஸ்வரி ஜெயபாலன் ஆகியோரின் அருமைத் தந்தையும், திருமதி சிவபதிமலர் பாலசிங்கம், திருமதி தவமணி குமாரகுலசிங்கம், திரு ந. சுந்தர நடராஜன் (ஆசிரிய ஆலோசகர், கிளிநொச்சி) காலஞ்சென்ற திரு. இ. ஜெயபாலன் (நிர்வாக அதிகாரி ,நெற்சந்தைப்படுத்தும்சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமஞரும் பாலசங்கர் (யாழ். இந்துக்கல்லூரி) பாலமயூரகன் [யாழ். பரியோவான் கல்லூரி] துதிப்பிரியா, பிரியலக்ஷ்ஞ, சாந்திபூஷண் [யாழ். இந்து ஆரம்பபாடசாலை] மேனகாசாந்தி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி] ஜனிதாசாந்தி ஆகியோரின் அன்புப் பாட்டஞரும் ஆவர்.

அன்ஞரின் பூதவுடல் 18 - 6 - 86 புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு 478/3 K.K.S. வீதியில் உள்ள அன்ஞரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: P. K. பாலசிங்கம்

478/3, K. K. S. வீதி,
''சங்கரியா வளவு'',
யாழ்ப்பாணம்.

[C-2933]

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்

நவாலி வடக்கைச் சேர்ந்த க. தில்லையம்பலம் (பிரபல வாகன வர்த்தகர்) 17-06-86 அன்று காலமாஞர். இவர் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், சிவகுமாரன் (பிரபல வாகன வர்த்தகர்), சிறிகுமார் (சிங்கப்பூர்), யசோதா (ஆசிரியை, நவாலி மகாவித்தியாலயம்), உதயகுமார், நந்தகுமார், வசந்தகுமார். செந்தில்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வாகன வர்த்தகர் பெரியதம்பி, காலஞ்சென்ற தம்பிராசா, நடேசு, தளையசிங்கம், செல்லத்துரை, அரியரத்தினம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் மகனுமாவார். அன்ஞரின் ஈமக்கிரியைகள் இன்று (18-06-86) பி. ப. 3-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நவாலி ஆரயம்பிட்டி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி,
மானிப்பாய்.

தி. சிவகுமாரன்
(C-2954)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org